**World Christian Fellowship**
www.wcflondon.com
wcflondon@gmail.com

## *கலாத்தியர் - பாடம் 01*

# அப்போஸ்தலனாகிய பவுல் தான் நிறுவிய கலாத்திய சபைகளுக்கு எழுதிய நிருபம்.

## *சரியான சுவிசேஷம் (Right Gospel)*

தேவனோடு எப்படி சரியாக இருப்பது என்பதே ஒவ்வொரு மனிதனின் உள்ளார்ந்த அழுகையாகும்.

நம்முடைய வேத புத்தகத்தில் உள்ள யோபுவின் வாழ்கையை கொண்டு நாம் சில காரியங்களை பார்போம்

***யோபு 9:2, "ஆம், காரியம் இப்படியிருக்கிறது என்று அறிவேன்; தேவனுக்கு முன்பாக மனுஷன் நீதிமானாயிருப்பதெப்படி?"***

பரிசுத்த தேவனாகிய அவருக்கு முன்பாக நான் எப்படி சரியாக வாழ முடியும். யோபு என்பவன் நல்ல குணங்களை கொண்ட மனிதன்.

***யோபு 1:1, & 8, [1]ஊத்ஸ் தேசத்திலே யோபு என்னும் பேர்கொண்ட ஒரு மனுஷன் இருந்தான்; அந்த மனுஷன் உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாயிருந்தான்.***

*[8]கர்த்தர் சாத்தானை நோக்கி: என் தாசனாகிய யோபின்மேல் கவனம் வைத்தாயோ? உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாகிய அவனைப்போல பூமியில் ஒருவனும் இல்லை என்றார்.*

*யோபுவை குறித்து தேவனே சாட்சி கொடுக்கிறார்.*

- *குற்றமற்றவன்,*
- *சன்மார்க்கன்,*
- *தேவனுக்கு பயந்தவன் மேலும்*
- *பொல்லாப்புக்கு விலகுகிறவன்.*

*இப்படி நற்குணங்கள் மற்றும் தேவனுடைய சாட்சியை பெற்ற யோபு தேவனுக்கு முன்பாக சரியாக இருக்கவேண்டுமென்று நினைக்கும் பொழுது பாவிகளாகிய நாமும் அவ்வாறு இருக்க நினைக்க வேண்டுமல்லவா ?*

***யோபு 7:3-9, [3]மாயையான மாதங்கள் என்னுடைய சுதந்தரமாகி, சஞ்சலமான ராத்திரிகள் எனக்குக் குறிக்கப்பட்டது. [4]நான் படுத்துக்கொள்ளுகிறபோது, எப்பொழுது எழுந்திருப்பேன்? இராக்காலம் எப்பொழுது முடியும் என்று சொல்லி, கிழக்கு வெளுக்குமட்டும் அரண்டு புரளுகிறதினால் எனக்குப் போதுமென்று போகிறது. [5]என் மாம்சம் பூச்சிகளினாலும், அடைபற்றின புழுதியினாலும் மூடப்பட்டிருக்கிறது; என் தோல் வெடித்து அருவருப்பாயிற்று. [6]என் நாட்கள் நெய்கிறவன் எறிகிற நாடாவிலும் தீவிரமாய் ஓடுகிறது; அவைகள் நம்பிக்கையில்லாமல் முடிந்துபோகும். [7]என் பிராணன் காற்றைப்போலிருக்கிறதென்றும், என் கண்கள் இனி நன்மையைக் காணப்போகிறதில்லையென்றும் நினைத்தருளும். [8]இப்போது என்னைக் காண்கிறவர்களின்***

கண்கள் இனி என்னைக் காண்பதில்லை; உம்முடைய கண்கள்
என்மேல் நோக்கமாயிருக்கிறது; நானோ
இல்லாமற்போகிறேன். [9]மேகம் பறந்துபோகிறதுபோல,
பாதாளத்தில் இறங்குகிறவன் இனி ஏறிவரான்.

யோபு 7:11-21, [11]ஆகையால் நான் என் வாயை அடக்காமல், என்
ஆவியின் வேதனையினால் பேசி, என் ஆத்துமத்தின்
கசப்பினால் அங்கலாய்ப்பேன். [12]தேவரீர் என்மேல் காவல்
வைக்கிறதற்கு நான் சமுத்திரமோ? நான் ஒரு திமிங்கிலமோ?
[13]என் கட்டில் எனக்கு ஆறுதல் கொடுக்கும் என்றும், என்
படுக்கை என் தவிப்பை ஆற்றும் என்றும் நான்
சொல்வேனாகில், [14]நீர் சொப்பனங்களால் என்னைக்
கலங்கப்பண்ணி, தரிசனங்களால் எனக்குத்
திகிலுண்டாக்குகிறீர். [15]அதினால் என் ஆத்துமா, நெருக்குண்டு
சாகிறதையும், என் எலும்புகளோடே உயிரோடிருக்கிறதைப்
பார்க்கிலும், மரணத்தையும் விரும்புகிறது.
[16]இப்படியிருக்கிறதை அரோசிக்கிறேன், எந்நாளும்
உயிரோடிருக்க விரும்பேன், என்னை விட்டுவிடும்; என் நாட்கள்
மாயைதானே. [17]மனுஷனை நீர் ஒரு பொருட்டாக
எண்ணுகிறதற்கும், அவன்மேல் சிந்தை வைக்கிறதற்கும்,
[18]காலைதோறும் அவனை விசாரிக்கிறதற்கும், நிமிஷந்தோறும்
அவனைச் சோதிக்கிறதற்கும், அவன் எம்மாத்திரம்? [19]நான் என்
உமிழ்நீரை விழுங்காதபடி எத்தனைகாலம் என்னை
நெகிழாமலும், என்னை விடாமலும் இருப்பீர். [20]மன்னுயிரைக்
காப்பவரே, பாவஞ்செய்தேனானால் உமக்கு நான்
செய்யவேண்டியது என்ன? நான் எனக்குத்தானே
பாரமாயிருக்கும்படிக்கு, நீர் என்னை உமக்கு இலக்காக
வைத்தது என்ன? [21]என் மீறுதலை நீர் மன்னியாமலும், என்
அக்கிரமத்தை நீக்காமலும் இருக்கிறது என்ன? இப்பொழுதே

**மண்ணில் படுத்துக்கொள்வேன்; விடியற்காலத்திலே என்னைத் தேடுவீரானால் நான் இரேன் என்றான்.**

*நீங்கள் "ஒரு நல்ல மனிதனாக இருங்கள்" என்பதே அனைத்து மதங்கள் சொல்லும் பதிலாகும் . நீங்கள் எதாவது காரியம் செய்யுங்கள் அப்பொழுது தேவன் உங்கள் மேல் பிரியமாக இருப்பார் என்றும் சிலர் கூறுவார்கள் . (எ.க)ஆலயத்திற்கு செல்லுங்கள் , உபவாசம் இருங்கள், காணிக்கை கொடுங்கள் மற்றும் பல.*

*அதே போல தான் யோபுவின் நண்பனாகிய பில்தாதும் யோபுவை நோக்கி "நீ நல்ல மனிதனாக இரு" என்று கூறுகிறார்*

*யோபுவின் நண்பனாகிய சூகியனான பில்தாத் (Bildad Shuhite) பிரதியுத்தரமாக,*

**யோபு *8:2-6*, "[2]நீர் எந்தமட்டும் இப்படிப்பட்டவைகளைப் பேசுவீர்? எதுவரைக்கும் உம்முடைய வாயின் வார்த்தைகள் பலமான காற்றைப்போலிருக்கும்? [3]தேவன் நியாயத்தைப் புரட்டுவாரோ? சர்வவல்லவர் நீதியைப் புரட்டுவாரோ? [4]உம்முடைய பிள்ளைகள் அவருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்திருந்தாலும் அவர்களுடைய பாதகத்தின் ஆக்கினைக்கு அவர்களை அவர் ஒப்புக்கொடுத்திருந்தாலும், [5]நீர் தேவனை ஏற்கனவே தேடி, சர்வவல்லவரை நோக்கி விண்ணப்பஞ்செய்து, [6]சுத்தமும் செம்மையுமாய் இருந்தீரேயானால், அப்பொழுது அவர் உமக்காக விழித்து நீதியுள்ள உம்முடைய வாசஸ்தலத்தைச் சாங்கோபாங்கமாக்குவார்.**

**யோபு *9*** *ஆம் அதிகாரத்தை வாசித்து பாருங்கள் , யோபு கேட்கிறார் "நான் தேவனோடு சரி செய்வது எப்படி"? முதல்* ***25*** *வசனங்களை வாசித்து பாருங்கள்.*

*இதுபோன்ற வேதனை, பயம், அச்சம் நம் இருதயத்திலும் தோன்றுகிறதா? ஆனால் இன்றைய சபைகளில் கடவுளுக்கு பயப்படுகிறவர்கள், நியாயத்தீர்புக்கு அஞ்சுபவர்கள், தேவனுடைய கோபத்திற்கு பயப்படுகிறவர்கள் காணப்படுவதில்லை. அதனால் பாவிகள் வஞ்சனையில் வாழ்கின்றனர். அவர்கள் தொடர்ந்து "தேவன் உங்களை நிபந்தனையின்றி அன்புகூறுகிறார்." என்கின்ற வஞ்சனையான செய்தியை மட்டும் கேட்கின்றனர்.*

*நீங்கள் தேவனுடன் சமரசம் செய்யாவிட்டால், அவருடைய நித்திய கோபத்தை நோக்கி நீங்கள் செல்கின்றீர்கள் என்பதை மறந்துவிடக்கூடாது.*

## ***தேவனோடு எப்படி சரியாக இருப்பது?"***

***சங்கீதம் 130:3, கர்த்தாவே, நீர் அக்கிரமங்களைக் கவனித்திருப்பீரானால், யார் நிலைநிற்பான், ஆண்டவரே?***

***சங்கீதம் 143:2, ஜீவனுள்ள ஒருவனும் உமக்கு முன்பாக நீதிமான் அல்லாததினாலே, அடியேனை நியாயந்தீர்க்கப் பிரவேசியாதேயும்.***

***ஏசாயா 64:6-7, [6]நாங்கள் அனைவரும் தீட்டானவர்கள்போல இருக்கிறோம்; எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தைபோல இருக்கிறது, நாங்கள் அனைவரும் இலைகளைப்போல் உதிருகிறோம்; எங்கள் அக்கிரமங்கள் காற்றைப்போல் எங்களை அடித்துக்கொண்டுபோகிறது. [7]உமது நாமத்தை நோக்கிக் கூப்பிடுகிறவனும், உம்மைப் பற்றிக்கொள்ளும்படிக்கு விழித்துக்கொள்ளுகிறவனும் இல்லை; தேவரீர் உம்முடைய முகத்தை எங்களை விட்டு மறைத்து, எங்கள் அக்கிரமங்களினிமித்தம் எங்களைக் கரையப்பண்ணுகிறீர்.***

***மீகா 6:6-7,*** [6]***என்னத்தைக்கொண்டு நான் கர்த்தருடைய சந்நிதியில் வந்து, உன்னதமான தேவனுக்கு முன்பாகப் பணிந்துகொள்வேன்? தகனபலிகளைக்கொண்டும், ஒரு வயது கன்றுக்குட்டிகளைக்கொண்டும் அவர் சந்நிதியில் வரவேண்டுமோ?*** [7]***ஆயிரங்களான ஆட்டுக்கடாக்களின் பேரிலும், எண்ணெயாய் ஓடுகிற பதினாயிரங்களான ஆறுகளின்பேரிலும் கர்த்தர் பிரியமாயிருப்பாரோ? என் அக்கிரமத்தைப் போக்க என் முதற் பேறானவனையும், என் ஆத்துமாவின் பாவத்தைப் போக்க என் கர்ப்பக்கனியையும் கொடுக்கவேண்டுமோ?***

***நான் எப்படி தேவனுடன் நீதிமானாக இருப்பது?***

*இது தான் சங்கீதக்காரன், தீர்க்கதரிசிகள் மற்றும் யோபுவின் கண்ணீராக இருந்தது.*

*சீர்திருத்தம் நடைபெற்று 500 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது. சீர்திருத்தம் நடை பெற காரணமாக அமைந்தது இந்த காலத்தியர் புஸ்தகம் . சீர்திருத்தத்தின் தந்தையான மார்டின் லூதர் (Martin Luther) என்பவர் தேவனுக்கு முன்பாக நீதிமானாக வாழ விரும்பி நிறைய காரியங்களை செய்தார்.*

*லூதர் மற்ற துறவிகளை போல இரட்சிப்பு என்பது கருணையால் பெறுவது என்றாலும் அதனை சம்பாதித்து பெற வேண்டும் என்பதை கற்றிருந்தார். நீங்கள் அதற்கான தகுதியை பெற்றவராக இருந்தால், தேவன் உங்களுக்கு அதற்கான கருணையை கொடுப்பார் என்று நினைத்தார். அந்த கருணையை சம்பாதித்து பெறுவதற்கு அவர் பல காரியங்களை செய்தார்.*

- ✓ *அவர் அனைத்து சுய விருப்பத்தையும் நிராகரித்தார்*
- ✓ *அவர் அடிப்படையில் ஒரு சிறிய ரொட்டி மற்றும் தண்ணீர் வகை உணவு சாப்பிட்டார்*
- ✓ *அவர் அசவுரியமான ஆடைகளுடன் போராடினார்*
- ✓ *அவர் தனது காலணிகளில் வலி ஏற்படுத்திக்கொண்டார்,*
- ✓ *அவர் தனது இடுப்பைச் சுற்றி வலி ஏற்படுத்திக்கொண்டார்,*
- ✓ *தூக்கமில்லாத கண்விழிப்பிற்கு தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.*
- ✓ *அவர் தன்னை பிச்சைக்காரனை போல மாற்றி கொண்டார்.*
- ✓ *அவர் அடிக்கடி உபவாசம் இருந்ததால், இறந்து போகப் போகிறார் என்று அவரது நண்பர்கள் பயந்தனர்,*
- ✓ *அவர் 800 மைல்கள் ரோமிற்கு முன்னும் பின்னுமாக நடந்தே சென்றார்.*

*ரோமில் உள்ள ஸ்கேலா ஸ்கேண்டா (Scala Sancta) என்ற புனிதமான படிகளில் தான் நம்முடைய தேவனாகிய இயேசு பிலாத்துவின் (Pilate) தீர்ப்பிற்கு பின் நடந்து சென்றார் என நினைக்கிறேன். லூதர் அந்த படிகளில் தவழ்ந்து சென்று ஒவ்வொரு படிகளிலும் தலை வணங்கி அந்த படிகளுக்கு முத்தமிட்டார்.*

*அவர் தம்முடைய பாவமன்னிப்பு கேட்கும் பாதிரியாராகிய ஸ்தௌபிட்ஸிடம் (Staupitz) ஒரு நாளைக்கு ஆறு மணிநேரம் தம்முடைய பாவத்தை அறிக்கையிடுவார். (இந்த பெரிய பாவ அறிக்கைகளினால் களைத்துப்போன ஸ்தௌபிட்ஸ் (Staupitz) லூதரிடம், "நீங்கள் விபசாரம் அல்லது வேசித்தனம் செய்யாவிட்டால் திரும்பி வராதீர்கள். இந்த முடிவில்லா பாவ அறிக்கைகளை கூறுவதை நிறுத்துங்கள்." என்றே கூறிவிட்டார்.*

*"பிரார்த்தனை, உபவாசம், பாவ அறிக்கை என்று எல்லாம் செய்துவிட்டேன் ஆனாலும் என்னால் தேவனோடு சரியாக முடியவில்லையே என்று வியாகுலபட்டார்.*

*அந்த மனமுடைந்த நேரத்தில் இந்த வசனத்தை தியானித்தார்.*

*"**தன் விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்**." (**ஆபகூக் 2:4***

***கலாத்தியர் 3:11**, **ரோமர் 1:17**, **எபிரெயர் 10:38**), அவருக்குள் தெளிவு பிறந்தது. அதற்கு பிறகு அவர் ரோம கத்தோலிக்க அமைப்பின் இந்த 95 பழக்கங்களையும் 1517ஆம் ஆண்டில் கண்டித்து பதிவு செய்தார். அவர் இதனை ஜெர்மனியில் உள்ள விட்டேன்பர்கில் (Wittenberg) இருக்கும் ரோம கத்தோலிக்க சபையின் வாசலில் பதிவு செய்துள்ளார். இது தான் சீர்திருத்தத்திற்கான (reformation) காரணமாகும்.*

*கத்தோலிக்க சபையினர் உத்தரிப்புஸ்தலம் (purgatory) என்னும் இடத்தை உருவாக்கி இருந்தனர். ஒருவன் பரலோகத்திற்கு செல்வதற்கு தகுதயுல்லவனாயிராமல் ஆனால் அதேசமயம் அவன் நரகத்திற்கு செல்லும் அளவுக்கு கெட்டவனுமாய் இல்லாதிருப்பவர்க்கு என்று இந்த உத்தரிப்பு ஸதலத்தை உருவாக்கினார்கள். பரலோகத்திற்குச் செல்வதற்கு முன்னால் அவர்களின் மீதமுள்ள பாவத்தை சுத்திக்கரிக்கப்பதே உத்தரிப்புஸ்தலம் (purgatory) நோக்கமாகும்.*

*பரலோகத்திற்குச் செல்வதற்கு மிகவும் மோசமானவர்களும், ஆனால் நரகத்திற்கு செல்வதற்கு மிகவும் நல்லவர்களுமாக பலர் உள்ளனர். அவர்களுக்கு சில சுத்திகரிப்பு தேவைப்படுகிறது. அது தான் பர்கேடரியில் (purgatory) நடைபெற்றது/*

*லூதர் (Luther) உள்ளுக்குள்ளே குற்றவுணர்வுகளினாலும் பயத்தினாலும் மிகுந்த வேதனைக்குள்ளானார். துறவிகள்*

*தேவனுக்கு பயந்தும் அவருடைய கோபத்திற்கு பயந்தும் இருந்தனர். அவர்கள் இயேசுவிற்கும் அவருடைய நியாத்தீர்ப்பிற்கும் பயந்ததினாலே மரியாளிடம் சென்றனர். பிதாவாகிய தேவன் மற்றும் இயேசு கிறிஸ்துவை காட்டிலும் மரியாள் மிகவும் கனிவுள்ளவளாக இருந்தாள்; அதனால் அவர்கள் அவளிடம் சென்று அவள் கிறிஸ்துவிடம் தமக்காக மன்றாடி இரட்சிப்பை பெற்றுத்தருமாறு அவளிடம் மன்றாடினார். ஆனால் லூதரின் தரப்பிலோ மரியாள் அதற்கு உகந்தவர் அல்ல என்பதை அவர் நன்கறிந்திருந்தார்.*

*லூத்தர் அவர் செய்யக்கூடிய அனைத்தையும் செய்து கொண்டிருந்தார், ஆனால் தேவன் அவருக்கு பதிலளிக்கவில்லை.*

- *இயற்கையினால் தான் ஒரு பாவி என்று அறிந்தார்*
- *கடவுள் இயற்கையிலும் நடத்தையிலும் முற்றிலும் பரிசுத்தமானவர்*
- *இந்த இடைவெளி எல்லையற்றதாக இருந்தது,*
- *அவரால் அந்த இடைவெளியை தாண்டிச் செல்ல முடியவில்லை, மேலும்*
- *தம்மால் தேவனை பிரியப்படுத்த முடியவில்லை என வருந்தினார்.*

*சுருக்கமாக கூறவேண்டும் என்றால்,* ***மார்டின் லூதர் (Martin Luther)*** *உண்மையான சுவிசேஷத்தை அறிவதற்கு முன்னர் கடவுள் மீது மிகுந்த கோபத்துடன் இருந்தார்.*

*மார்டின் லூதர் (Martin Luther): "****பாவிகளை தண்டிக்கிற நீதியுள்ள தேவனை நான் வெறுத்தேன்; ஆம் அவரை நான் நேசிக்கவில்லை. மேலும் இரகசியமாக நிந்திக்கவில்லை***

***என்றாலும், நிச்சயமாக முணுமுணுத்தேன். நான் தேவனிடம் கோபமாக இருந்தேன். மேலும் அவரிடம், 'ஆதி முதலான பாவம் மூலம் பரிதாபகரமான பாவிகள் தங்களது நித்திய ஜீவனை பத்து கற்பனைகளினால் நசுக்கப்பட்டு இழந்தது போதாதா. தேவன் இல்லாத நற்செய்தியானது வலிக்கு மேல் வலியை ஏற்படுத்துகிறது. நற்செய்தி அவருடைய நீதியுள்ள கோபத்தில் நம்மை அச்சுறுத்துகிறது.' கடுமையான மற்றும் பதற்றமான மனசாட்சியைக் கொண்டு கடவுளுக்கு எதிராக நான் மோதினேன்."***

*லூதர், "**கலாத்தியருக்கு எழுதிய நிருபம் எனக்கான நிருபம், அதை நான் திருமணம் செய்து கொண்டேன். கலாத்தியரே என்னுடைய கேதரின் (**Katherine)" எனக் கூறினார்.*

*சமகால ஆழமற்ற கிறித்துவத்தில் இத்தகைய சீற்றம் எங்கே உள்ளது? தேவனுக்கான பயம் மற்றும் பரிசுத்த கோபம் எங்கே உள்ளது? சமகால ஆழமற்ற கிறிஸ்துவத்தின் தவறான சுவிசேஷமானது அத்தகைய சீற்றத்தை உருவாக்குவதில்லை ஏனென்றால் அவை அத்தகையை பயத்தை உருவாக்குவதில்லை.*

*அபோஸ்தலராகிய பவுலுக்கும் அதே கேள்வி இருந்தது.*

***ரோமர் 10:3-4, [3]எப்படியென்றால், அவர்கள் தேவநீதியை அறியாமல், தங்கள் சுயநீதியை நிலைநிறுத்தத் தேடுகிறபடியால் தேவநீதிக்குக் கீழ்ப்படியாதிருக்கிறார்கள். [4]விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும்படியாகக் கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார்.***

*இயேசு இதனை குறுகிய வழி மற்றும் பரந்த வழி என அழைத்தார்! அவை இரண்டும் உங்களை பரலோகத்திற்கு வழிகாட்டும் என கூறுகிறது ஆனால் அவை இரண்டும் அங்கு செல்லாது.*

- *குறுகிய வழி தான் சுவிசேஷத்தின் வழி, கிருபையின் வழி, விசுவாசிப்பதன் வழி, மேலும் அது தான் நித்திய ஜீவனுக்கு நம்மை அழைத்துச் செல்லும்.*

- *பரந்த வழியானது பிற மதங்களின் வழியாகும். அவை பரலோகம் என்று கூறும் ஆனால் அது நரகத்திற்கு நேராக அழைத்துச் செல்லும்.*

*உண்மையான சுவிசேஷத்தை விசுவாசிப்பதை தவிர வேறு வழியில் இரட்சிப்பு இல்லை, மற்ற அனைத்து செய்திகளும், மற்ற அனைத்து மதங்களும், மற்ற அனைத்து நற்செய்திகளும் ஒரே வடிவத்தில் அல்லது வேறு வடிவத்தில் பேயும்**(Devil)**, ஏமாற்றங்களும், சாத்தானிய **(Demonic)** மதங்களாகும்.*

***கலாத்தியர் 1:9, முன் சொன்னதுபோல மறுபடியும் சொல்லுகிறேன்; நீங்கள் ஏற்றுக்கொண்ட சுவிசேஷத்தை யல்லாமல் வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்.***

*ரோம கத்தோலிக்க சபை "இயற்கை இறையியல்" (Natural Theology) என்ற இறையியலை உருவாக்கினர். வேதாகமம் இல்லாத மனிதர்கள், நற்செய்தியை அறியாத மனிதர்கள், கிறிஸ்துவைக் குறித்து அறிவற்ற மனிதர்கள் பரலோகத்திலும் தேவ இராஜ்யத்திலும் காணப்படுவார்கள் என இயற்கை இறையியல் கூறுகிறது. அவர்கள் தேவனோடு இணைக்கபடுவார்கள். அவர்கள் மன்னிக்கப்பட்டு நித்திய ஜீவனை பெறுவார்கள் என்று அந்த இறையியல் கூறுகிறது.*

*இரண்டாம் வாடிகன் ஆலோசனை சங்கத்தின் **(2nd Vatican Council)** போது போப் அவர்கள் இதனை கூறினார்:*

*“**பாக்கியமுள்ளவர்கள்** (beatitudes) **மற்றும் வாழ்வின் துன்பங்களைக் கடைப்பிடித்து வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் கடவுளுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பார்கள்.**”*

*ஏழை,தாழ்மை,துக்கித்து வருந்துவோர், வேதாகமம் இல்லாதவர், நற்செய்தியற்றவர், கிறிஸ்துவை அறியாதவர் என்றாலும் நீங்கள் அனைவரும் தேவனின் இராஜ்யத்தில் இருப்பீர்கள் என்று கூறுகின்றார்கள்.*

*புரட்டஸ்தாந்து (Protestants) மதத்தினருக்கு மற்றொரு யோசனை இருந்தது மேலும் அதனை அதிகமான கருணை **(Wider Mercy)** என்று கூறுவார்கள். தேவனுடைய கருணையானது வெறும் கிறிஸ்தவத்தைக் காட்டிலும் வெறும் நற்செய்தியை காட்டிலும் மிகவும் பரந்து உள்ளது என்பது அவர்களது கருத்து. ‘முதல் நூற்றாண்டில் பாலஸ்தீனத்தில் நடந்ததை காட்டிலும், தேவன் மீட்பில் இன்னும் அதிகமாக செல்கிறார்’ என ஒரு எழுத்தாளர் கூறினார்.*

*என். டி. ரைட் (N. T. Wright), என்ற ஒரு பிரிட்டிஷ் சுவிசேஷகர் மற்றும் மதத்துவ அறிஞர் (Evangelical theologian), ‘புரட்சி தொடங்கிய நாள்’ (The Day the Revolution Began) என்ற தன்னுடைய புத்தகத்தில் இதனை பதிவிட்டுள்ளார்.*

*அவர் பின்வருமாறு அவருடைய புஸ்தகத்தில் கூறியுள்ளார்*

*“இரட்சிப்பைப் பற்றிய நமது புரிந்துகொள்ளுதலை நாம் தெய்வ வழிபாடாக்கியுள்ளோம் (paganize). நாம் ஆராய உள்ள சில உண்மையான விவிலிய கருத்துக்கு பதிலாக கடவுள் தம்முடைய கோபத்தைத் திருப்தி செய்ய இயேசுவைக் கொலை செய்தார் என்று எண்ணிக்கொண்டிருக்கிறோம்.”*

*தேவன் நம்முடைய பிற தெய்வ வழிபாட்டினை கண்டு கோபம் கொண்டதால் நமக்கு பதிலாக இயேசுவை கொலை செய்துவிட்டார்.*

*மேலும் அவர் "பாவிகளின் இடத்தில் கிறிஸ்து இறந்தார் என்பது புறமத நம்பிக்கைக்கு நெருக்கமாக இருக்கிறது. ஏனென்றால் இது ஒரு மனிதனை கொன்று ஒரு கடவுளின் கோபத்தை அமைதியாக்குவதாகும். மேலும் இதற்கும் இஸ்ரவேலின் வேத வாக்கியங்களுக்கும் புதிய ஏற்பாட்டிற்கும் எந்த ஒரு சம்பந்தமும் இல்லை" எனக் கூறுகிறார்.*

*அதனால் அவர் இந்த மாற்று பிராயச்சித்தத்தை நிராகரித்தார். இயேசு என்பவர் தேவன் நம் பாவங்களுக்காக மரிக்க தேவன் தேர்ந்தெடுத்த தியாகம் என்பதை நிராகரிக்கிறார்.*

*அவர் மேலும், "யாரும் பரலோகம் செல்லும் வரை நியாயந்தீர்க்கப்பட மாட்டோம்." என்றும் கூறுகிறார். மேலும் அவர் "பவுல் இங்கு சுவிசேஷம் என்றால் விசுவாசத்தின் மூலம் நியாயத்தீர்ப்பின் கோட்பாடு என குறிப்பிடவில்லை என்பதை நான் அழுத்திக் கூற விரும்புகிறேன். சுவிசேஷக நூல்கள் என்பது மக்கள் எவ்வாறு இரட்சிக்கப்பட்டனர் என்பதை பற்றிய தொகுப்பு அல்ல." என்றும் எழுதி இருக்கிறார்.*

*ஒப்ராஹ் வின்பிரே என்பர் கூட "பரலோகத்திற்கு செல்லும் பல வழிகள் " என்று ஆரம்பித்தார். ஆனால் நாம் வேதத்தை ஒழுங்காக வாசித்தால் நன்றாக புரிந்து கொள்ளலாம் பரலோகத்திற்கு செல்ல ஒரே வழி "கர்த்தராகிய தேவனையும் அவருடைய குமாரனாகிய ஏசு கிறிஸ்துவையும் விசுவாசிப்பதே "*

***1 கொரிந்தியர் 15:1-2, [1]அன்றியும், சகோதரரே, நான் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தை மறுபடியும்***

***உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்; நீங்களும் அதை ஏற்றுக்கொண்டு, அதிலே நிலைத்திருக்கிறீர்கள் [2]நான் உங்களுக்குப் பிரசங்கித்தபிரகாரமாய், நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால், அதினாலே நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள்; மற்றப்படி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்குமே.***

*எந்த பயமும், கோபமும், எந்த குற்றமும், முகாந்திரமும், பயங்கரவாதமும், சித்திரவதைகளும் இல்லாமல் தவறான சுவிசேஷத்தை பிரகடனம் செய்து மேலும் சரியான சுவிசேஷத்தை மறுத்து இருத்தல் என்பது பாவமாகும்.*

***தேவ பயம் தான் இன்றைய சபைகளில் இல்லாது இருப்பது.***
***தேவனுக்கு பயந்த மக்கள் எங்கே உள்ளனர்?***
***நியாயத்தீர்ப்பை குறித்த பயம் எங்கே உள்ளது ?***
***தேவனுக்கு பயந்த பாவிகள் எங்கே உள்ளனர்?***
***கோபம் எங்கே உள்ளது?***
***தேவ பயம் எங்கே?***

*மார்டின் லூதர் (Martin Luther), இந்த உண்மையான சுவிசேஷத்தை அவருடைய ஆத்துமாவில் அறிந்தபோது பரிசுத்த ஆவியானவர் அவருக்கு ஜீவனையும் சமாதானத்தையும் அளவில்லா சந்தோஷத்தையும் கொடுத்தார். அவர் தேவ இரக்கத்தையும் பாவ மன்னிப்பையும் நன்கு உணர்ந்து கொண்டார்.*

- ✓ *அவர் மன்னிக்கப்பட்டார்,*
- ✓ *அவர் மீட்கப்பட்டார்,*
- ✓ *அவர் ஏற்றுக்கொள்ளப்பட்டார்,*
- ✓ *அவர் இணைக்கப்பட்டார்,*
- ✓ *அவர் மாற்றப்பட்டார்,*

- ✓ *அவர் தத்தெடுக்கப்பட்டார் மேலும்*
- ✓ *அவர் நீதிமானக்கப்பட்டார்*

*இவை அனைத்தும் கிருபை மற்றும் விசுவாசத்தினால் மட்டுமே உண்டானது.*

***கலாத்தியர் 2:20, கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்.***

***ரோமர் 3:21, இப்படியிருக்க, நியாயப்பிரமாணமில்லாமல் தேவநீதி வெளியாக்கப்பட்டிருக்கிறது; அதைக்குறித்து நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களும் சாட்சியிடுகிறது,***

*பழைய ஏற்பாட்டில் இரட்சிப்பை குறித்து சாட்சியம் கொடுக்கப்பட்டுள்ளது. இயேசு கிறிஸ்துவிடம் நம்பிக்கை வைப்பதன் மூலம் பாவிகளுக்கு தேவனின் நீதி வருகிறது.*

***ரோமர் 3:24, இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப் படுகிறார்கள்;***

*நீதி மற்றும் நியாயப்பிரமாணத்தினால் வருவதல்ல.*

***கலாத்தியர் 3:21, அப்படியானால், நியாயப்பிரமாணம் தேவனுடைய வாக்குத்தத்தங்களுக்கு விரோதமா? அல்லவே; உயிரைக் கொடுக்கத்தக்க நியாயப்பிரமாணம் அருளப் பட்டிருந்ததானால், நீதியானது நியாயப்பிரமாணத்தினால் உண்டாயிருக்குமே.***

***ஒரு மனிதன் தேவனிடம் எவ்வாறு சரியாக இருக்க முடியும்?***

*இயேசு கிறிஸ்துவின் மூலம் கொடுக்கப்படும் நீதியின் மூலமே ஒரு மனிதன் தேவனிடம் சரியாக நிற்க முடியும்.*

*அவருடைய கிருபையினாலும் இரகத்தினாலும் இரட்சிக்கபட்டோம் , இது நம்மால் உண்டானது அல்ல .*

***கலாத்தியர் 1:6, உங்களைக் கிறிஸ்துவின் கிருபையினாலே அழைத்தவரை நீங்கள் இவ்வளவு சீக்கிரமாய் விட்டு, வேறொரு சுவிசேஷத்திற்குத் திரும்புகிறதைப்பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன்,***

***கலாத்தியர்** 1:7, **வேறொரு சுவிசேஷம் இல்லையே; சிலர் உங்களைக் கலகப்படுத்தி, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயிருக்கிறார்களேயல்லாமல் வேறல்ல.***

***சுவிசேஷம் என்றால் என்ன?***

*ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மேல் வைக்கிற விசுவாசத்தின் அடிப்படையில் உண்டாகிற நீதி தான் சுவிசேஷம்.*

*என் பாவங்களுக்காக இயேசு கிறிஸ்து மரித்ததினால் அவர் பெயரில் நான் வைக்கிற விசுவாசத்தின் மூலமாய் நான் தேவனுக்கு முன்பாக நீதிமானக்கப்பட்டேன் . என்னுடைய சுயநீதி அழுக்கான கந்தை, எனக்காக அவர் பலியானதினால் அவர் பரிசுத்தம் எனக்கு உண்டானது . நான் அவர் முன்பாக நீதிமானாக மாறினேன். இது தான் சுவிசேஷம்.இதை தவிர்த்து வேறு எந்த சுவிசேஷத்தையும் நீ ஏற்று கொள்ள வேண்டாம்.*

*பவுல் கொரிந்து பட்டணத்தில் உள்ள சபைக்கு எழுதுகிறார்,*

***2 கொரிந்தியர் 11:2-4, [2]நான் உங்களைக் கற்புள்ள கன்னியாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க***

***நியமித்தபடியால், உங்களுக்காக தேவவைராக்கியமான வைராக்கியங்கொண்டிருக்கிறேன். [3]ஆகிலும், சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்ததுபோல, உங்கள் மனதும் கிறிஸ்துவைப்பற்றிய உண்மையினின்று விலகும்படி கெடுக்கப்படுமோவென்று பயந்திருக்கிறேன். [4]எப்படியெனில், உங்களிடத்தில் வருகிறவன் நாங்கள் பிரசங்கியாத வேறொரு இயேசுவைப் பிரசங்கித்தானானால், அல்லது நீங்கள் பெற்றிராத வேறொரு ஆவியையும், நீங்கள் ஏற்றுக்கொள்ளாத வேறொரு சுவிசேஷத்தையும் பெற்றீர்களானால், நன்றாய்ச் சகித்திருப்பீர்களே.***

*ஆனால் இன்றைய நாட்களில் சுவிஷேசம் மிகவும் வஞ்சிக்கப்பட்டுள்ளது, சர்ப்பமானது ஏவாளை வஞ்சித்தது போல இன்றைய நாட்களில் சுவிஷேசம் கறைப்பட்டுள்ளது.*

- *வேறொரு இயேசுவோடு,*
- *வேறொரு பரிசுத்த ஆவியோடு, மேலும்*
- *வேறொரு நற்செய்தியோடும் வந்துள்ளனர்.*

*மேலும் அதனை நீங்கள் மிகவும் அழகாக தாங்குகிறீர்கள். நீங்கள் அவர்களை வரவேற்கிறீர்கள்.*

*இது அச்சத்தை ஏற்படுத்துகிறது.*

*சிதைந்த**(corrupted gospel)** நற்செய்தி –*

- *வேலையை குறித்த நற்செய்தி (Gospel of works),*
- *செழுமையை குறித்த நற்செய்தி (Prosperity Gospel),*
- *இயற்கை இறையியல் என்ற நற்செய்தி (Gospel of natural theology),*

- *அளவில்லா கருணை என்ற நற்செய்தி (Gospel of wider mercy),*
- *பவுலை குறித்தொரு புதிய முன்னோக்கு (New perspective of Paul)*

  *அதை நீங்கள் எவ்வாறு அழைக்க வேண்டுமென்றாலும் அழைக்கலாம் – மற்றொரு நற்செய்தியை ஏற்றுக்கொள்ளக் கூடாது. மற்றொரு சுவிசேஷத்தின் மீது சாபம் உச்சரிக்கப்பட வேண்டும்.*

*நாம் பரலோகத்திற்கு சென்று அங்கு எந்த நற்செய்தி கொண்டாடப்படுகிறது என்பதை பார்ப்போம். ஒரே ஒரு பரலோகம் மட்டுமே உள்ளது.*

***எந்த நற்செய்தியை பரலோகம் கொண்டாடுகிறது?***

*அவர் ஏதேனும் வேலை செய்ய வேண்டும் என்ற நற்செய்தியையோ மனித தகுதியையோ கொண்டாடுகிறார்களா?*

***வெளி 5:6-14, [6]அப்பொழுது, இதோ, அடிக்கப் பட்டவண்ணமாயிருக்கிற ஒரு ஆட்டுக்குட்டி சிங்காசனத் திற்கும், நான்கு ஜீவன்களுக்கும், மூப்பர்களுக்கும் மத்தியிலே நிற்கக்கண்டேன்; அது ஏழு கொம்புகளையும் ஏழு கண்களையும் உடையதாயிருந்தது; அந்தக்கண்கள் பூமியெங்கும் அனுப்பப்படுகிற தேவனுடைய ஏழு ஆவிகளேயாம். [7]அந்த ஆட்டுக்குட்டியானவர் வந்து, சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்தவருடைய வலது கரத்திலிருந்த புஸ்தகத்தை வாங்கினார். [8]அந்தப் புஸ்தகத்தை அவர் வாங்கினபோது, அந்த நான்கு ஜீவன்களும், இருபத்துநான்கு மூப்பர்களும் தங்கள் தங்கள் சுரமண்டலங்களையும், பரிசுத்தவான்களுடைய ஜெபங்களாகிய தூபவர்க்கத்தால் நிறைந்த பொற் கலசங்களையும் பிடித்துக்கொண்டு,***

***ஆட்டுக்குட்டியான வருக்குமுன்பாக வணக்கமாய் விழுந்து:***
[9]***தேவரீர் புஸ்தகத்தை வாங்கவும் அதின் முத்திரைகளை***
***உடைக்கவும் பாத்திரராயிருக்கிறீர்; ஏனெனில் நீர்***
***அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும்***
***ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து எங்களை தேவனுக்கென்று***
***உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு,*** [10]***எங்கள்***
***தேவனுக்கு முன்பாக எங்களை ராஜாக்களும் ஆசாரியர்களு***
***மாக்கினீர்; நாங்கள் பூமியிலே அரசாளுவோமென்று புதிய***
***பாட்டைப் பாடினார்கள்.*** [11]***பின்னும் நான் பார்த்தபோது,***
***சிங்காசனத்தையும் ஜீவன்களையும் மூப்பர்களையும்***
***சூழ்ந்திருந்த அநேக தூதர்களுடைய சத்தத்தைக் கேட்டேன்;***
***அவர்களுடைய இலக்கம் பதினாயிரம் பதினாயிரமாகவும்,***
***ஆயிரமாயிரமாகவுமிருந்தது.*** [12]***அவர்களும் மகா சத்தமிட்டு:***
***அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும்***
***ஐசுவரியத்தையும் ஞானத்தையும் பெலத்தையும் கனத்தையும்***
***மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப்***
***பாத்திரராயிருக்கிறார் என்று சொன்னார்கள்.*** [13]***அப்பொழுது,***
***வானத்திலும் பூமியிலும் பூமியின் கீழுமிருக்கிற சிருஷ்டிகள்***
***யாவும், சமுத்திரத்திலுள்ளவைகளும், அவற்றுளடங்கிய***
***வஸ்துக்கள் யாவும்: சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற***
***வருக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும்***
***மகிமையும் வல்லமையும் சதா காலங்களிலும் உண்டாவதாக***
***என்று சொல்லக்கேட்டேன்.*** [14]***அதற்கு நான்கு ஜீவன்களும்***
***ஆமென் என்று சொல்லின. இருபத்து நான்கு மூப்பர்களும்***
***வணக்கமாய் விழுந்து சதாகாலங்களிலும்***
***உயிரோடிருக்கிறவரைத் தொழுதுகொண்டார்கள்.***

*நாம் எவ்வாறு தேவ பிரசனத்திற்குள் வருவது?*

*நாம் இயேசுவின் இரத்தத்தால் வாங்கப்பட்டுள்ளோம். இது கிறிஸ்துவின் மாற்று இரத்தச் சீர்குலைவாகும் (Substitutionary blood atonement).*

*பரலோகத்தின் ஆராதனை அனைத்துமே தம்முடைய இரத்தத்தைத் சிந்திய ஆட்டுக்குட்டியை நோக்கிச் செல்கிறது.*

***How can I be right with God? நாம் எவ்வாறு சரியாக வாழ முடியும்?***

*ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தினால் மீட்கப்பட்டு நாம் தேவனுக்கு முன்பாக நீதிமனாக்கப்பட்டோம். இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனுக்கு முன்பாக சரியாக மூடியும். நமக்கும் ஆண்டவர்க்கும் உள்ள தொடர்பு இயேசு கிறிஸ்து என்பதை நாம் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.*

*இந்த நற்செய்தியே பரலோகத்தில் கொண்டாடப்பட்ட ஒரே நற்செய்தி ஆகும்.*

*பவுல் இந்த நற்செய்தியையே பிரகடனப்படுத்தி பாதுகாக்கவும் செய்கிறார். இதற்கு எதிராக வரக்கூடிய எல்லா காரியத்தையும் பவுல் வன்மையாக கண்டித்தார்.*

*இந்த நற்செய்தியையே நாமும் பிரகடனப்படுத்தி பாதுகாக்கவும் செய்கிறோம்!*

*இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனுக்கு முன்பாக நாம் சரியாக வாழ முடியும்.*